ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2374/30 – 2024 මාර්තු මස 07 වැනි බ්‍රහස්පතින්දා – 2024.03.07
2374/30 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

சப்பிரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டத்தில் றுவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில் எகொடபொதுபத்துவ சிறு பிரிவில் இல. 103ஏ, மொரலிய கிராம அலுவலர் பிரிவில் மொரலிய கிராமத்தில்அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இல. KE/RWN/2021/318 மற்றும் 2022.03.21 ஆந் திகதியிடப்பட்ட மேம்படுத்தப்பட்ட வரைபடப் படியெடுப்பில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ள கீழ் காணப்படும் பெயர் மற்றும் விஸ்தீரணத்தையுடைய காணித் துண்டின் எல்லைகள்:

01. துண்டு ‘A’ – றுவன்வெல்ல வத்த - விஸ்தீரணம்: 0.0776 ஹெக்டயார்

வடக்கு: பிரதேச சபை வீதி மற்றும் வரையறுக்கப்பட்ட மல்வத்த பெருந்தோட்ட நிறுவனம் உரிமை கோரும் றுவன்வெல்ல வத்த; கிழக்கு: வரையறுக்கப்பட்ட மல்வத்த பெருந்தோட்ட நிறுவனம் உரிமை கோரும் றுவன்வெல்ல வத்த மற்றும் களனி கங்கை; தெற்கு: களனி கங்கை மற்றும் வாய்க்கால்; மேற்கு : வாய்க்கால் மற்றும் பிரதேச சபை வீதி.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/ 18/ 2021/ WS /04.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, ஒற்றோபர் 10.

EOG 03 -0043

1A – G 41538 – 16 (2024/03)
இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.